செ.வெ.எண்: 100 நாள்: 1.2.2010

பத்திரிக்கை செய்தி

# தமிழ்நாடு விவசாயத்தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் நலவாரியம் உறுப்பினர்கள் புதுப்பித்தல் காலம் ஐந்தாண்டாக மாற்றம்

## வாரியத்தலைவர் டாக்டர் கே.பி.இராமலிங்கம் தகவல்

தமிழ்நாடு விவசாயத்தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் நலனுக்காக தொடங்கப்பட்ட தமிழ்நாடு விவசாய தொழிலாளர்கள் — விவசாயிகள்(சமூக பாதுகாப்பு மற்றும் நலம்) திட்டம் — 2006, 22.12.2006 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 2.50 ஏக்கர் வரை நஞ்சை நிலம் அல்லது 5.00 ஏக்கர் புஞ்சை நிலம் வைத்துள்ள விவசாயிகளும் மற்றும் விவசாயத்தொழிலாளர்களும் உறுப்பினராகும் தகுதி பெற்று, இத்திட்டத்தின் மூலம் கீழ்கண்ட பயன்களை பெற்று வருகின்றனர்.

| | | |
|---|---|---|
| திருமண உதவித்தொகை | | ஆண் : ரூ.3,000/— <br> பெண் : ரூ.5,000/— |
| இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு | | ரூ.12,500/- |
| விபத்து மரணம் மற்றும் ஈமச்சடங்கு | | ரூ.1,02,500/- |
| முதியோர் உதவித்தொகை | | மாதம் ரூ.400/- |

மேலும் இத்திட்டத்தின் கீழ் பதிவுபெற்ற உறுப்பினர்களின் குழந்தைகளின் கல்விக்காக சம்மந்தப்பட்ட கல்வித்துறையில் இருந்து உதவித்தொகையும், சுகாதாரத்துறையில் இருந்து டாக்டர்.முத்துலட்சுமி ரெட்டி, மகப்பேறு உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் இந்த திட்டத்தின் உறுப்பினர்களுக்கு மகப்பேறு உதவித்தொகையும் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டம் துவங்கப்பட்ட நாள் முதல் இன்று வரை 75,63,666— குடும்ப அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு, அதன்மூலம் 1,73,01,325— உறுப்பினர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இத்திட்டத்தின் விதிகளின் படி உறுப்பினர்களின் பதிவு மூன்றாண்டு முடிவில் புதுப்பிக்கபடவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில், 70,00,000- குடும்ப அடையாள அட்டைகள் திட்டம் துவங்கப்பட்ட காலத்தில் இருந்து மூன்று மாதக்காலத்திற்குள் வழங்கப்பட்டுவிட்டது. எனவே இத்திட்டத்தில் அறிவுறுத்தியப்படி 70,00,000- குடும்ப அடையாள அட்டைகளையும், புதுப்பிக்கும் பணி காலஅளவு அதிகாமாகத்தேவைப்படும் என்பதனாலும், இந்த இடைப்பட்ட காலத்தில் உறுப்பினர்களின் குடும்பங்களில் ஏற்படும் நிகழ்வுகளுக்கு உதவித்தொகை வழங்குவதில் சட்டசிக்கல்கள் ஏற்படும் என்பதனால் **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு, இந்த உறுப்பினர் பதிவினை புதுப்பிக்கும் காலக்கெடுவினை மூன்று (3) வருடத்தில் இருந்து அதிகப்படுத்தி நீட்டிப்பு செய்ய வாரியத்தலைவர் அவர்கள் வேண்டுகோள் விடுத்ததை தொடர்ந்து, அவ்வேண்டுகோள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அரசாணை எண்.34 (வருவாய்துறை நீ.சி1) நாள்: — 25.01.2010 — ல் உறுப்பினர் பதிவினை புதுப்பிக்கும் காலம் தற்சமயம் இருக்கும்** மூன்று ஆண்டுகளுக்கு பதிலாக ஐந்து ஆண்டுகள் **என காலநீட்டிப்பு செய்து திட்டத்தில் திருத்தம் செய்ய** மாண்புமிகு தமிழக முதல்வர் **அவர்களால் ஆணைப்பிறப்பிக்கப்பட்டுள்ளது.**

மேற்கூரிய அரசின் ஆணைப்படி சென்னை தவிர ஏனைய அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் சம்மந்தப்பட்ட தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்), தனிவட்டாட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) மற்றும் அனைத்து கிராம நிர்வாக அலுவலர்கள் மூலமாக உரிய நடவடிக்கை எடுத்திட தக்க அறிவுரை வழங்கப்பட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாக விவசாய தொழிலாளர் மற்றும் விவசாயிகள் நல வாரிய தலைவர் டாக்டர் கே.பி.இராமலிங்கம் தெரிவித்துள்ளார்.

கே.பி.இராமலிங்கம்
1/02/010

(டாக்டர் கே.பி.இராமலிங்கம்)
தலைவர்
தமிழ்நாடு விவசாய தொழிலாளர்கள் நலவாரியம்

வெளியீடு, இயக்குனர்
செய்தி ...